பக்கங்கள் 04

விலை ரூபா 5-00

# ஐக்கியதீபம்

திங்கள் AIKIYATHEEPAM. இதழ்

தீபம் : 43 டிசெம்பர் - 1994 ஒளி : 9

## நீத்தார் பெருமை

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு. 21

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று. 22

இருமை வகை தெரிந்து ஈண்டு அறம்பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு. 23

உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. 24

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு உளார் கோமான்
இந்திரனே சாலுங் கரி. 25

யா. மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல்
நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம்,
இலக்கம் 111, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

### கூட்டுறவு இயக்கத்தில் இருந்து

# மக்களை பிரித்தெடுக்காதீர்கள்!

## யாழ். செயலகத்திடம் கூட்டுறவாளர் கோரிக்கை

"போர்க்காலச் சூழலில் பல சிரமங்களுக்கும் மத்தியில் சேவை மனப்பான்மையுடன் செயலாற்றிவரும் கூட்டுறவாளர்களின்மேல் அங்கத்தவர்கள், மக்கள் அவநம்பிக்கைகொள்ளும் விதத்தில் யாழ். செயலகம் முன்னுக்குப்பின் முரணான அறிக்கைகளை மக்கள்முன் சமர்ப்பித்து, பல. நோ. கூட்டுறவுச்சங்கங்கள் மீது அவர்கள் வைத்துள்ள நம்பகத்தன்மையை இல்லாமல்செய்து, கூட்டுறவு இயக்கத்தில் இருந்து மக்களை அந்நியப்படுத்தும் யாழ். செயலகத்தின் செயற்பாடுகளை மனவேதனையுடன் கண்டிப்பதுடன் அவ்வாறான செயல்களை கைவிடுமாறு வேண்டுகிறோம்."

இவ்வாறு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத்தலைவர் திரு. வை. செந்திநாதன் ஐக்கிய தீபத்திற்கு அளித்த விஷேட பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பல நோ. கூ. சங்கங்களின் உணவு விநியோகம் சம்மந்தமான முரணான செய்திகளை அடிப்படையாக வைத்து திரு வை. செந்திநாதன் மேலும் தெரிவித்திருப்பதாவது:

### திருப்பி அனுப்பப்பட்டனர்

போதியளவு மா களஞ்சியத்தில் கையிருப்பில் உள்ளதென்றும், அவற்றை பல நோ. கூ. சங்கங்கள் எடுத்து பாவனையாளர்களுக்குத் தாராளமாக வழங்க வேண்டுமென்ற யாழ். செயலக அறிவித்தலின் பிரகாரம் காலதாமதமின்றி மாவினைகொள்வனவுசெய்யச் சென்ற சங்கங்களுக்கு "கப்பலில் மா வந்த பின்னரே விநியோகிக்கப்படும் என்றும், கையிருப்பில் உள்ள மாவை விநியோகிக்குமாறு" அறிவுறுத்தல் வழங்கி மா வழங்காது திருப்பி அனுப்பப்பட்னர். இந் நிலையில் தான் பல நோ. கூ. சங்கங்கள் தாம் கையிருப்பில் வைத்திருந்த மாவை கட்டுப்பாடாக மொத்த பங்கீட்டு அட்டைக்கு ஏற்றவாறு வழங்கினர்.

ஏற்கனவே யாழ், செயலகத்தால், கையிருப்பில் உள்ள மாவினை டிசம்பர் மாதம்வரை (மாரிகாலமழையினால் ஏற்படும் கப்பல்தாமதம்) கட்டுப்பாடாக பாவனையாளர்களுக்கு வழங்குமாறு செயலகத்தால் முன்னர் அறிவுறுத்தப்பட்டிருந்தமையால் இந்நடைமுறைகளை சங்கங்கள் பின்பற்றி வருகிறது.

### புறக்கணிப்பு:

இன்றைய போர்க்காலச் சூழலில் எத்தனையோ கோடிக்

(4ம் பக்கம் பார்க்க)

## போதியளவு மா வழங்கவில்லை

போதியளவு மா கையிருப்பில் உள்ளது என்று பாவனையாளர்களுக்கு பத்திரிகைகள் மூலம் தெரியப்படுத்திவிட்டு சங்கங்களின் மொத்தப் பங்கீட்டு அட்டைக்கு ஏற்றதான அளவு மாவினை யாழ். செயலகம் வழங்கவில்லை. என பல நோ. கூ. சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் தாம் கையிருப்பில் இருந்த மாவுடன் பங்கீட்டட்டைக்கு ஏற்றவாறு மா விநியோகம் செய்து வருவதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## இன அழிப்பில் மக்கள் சிக்குண்ட

### வேளையின் கூட்டுறவு காப்பாற்றியது!

"தமிழீழ மக்கள் சிறிலங்கா அரசின் திட்டமிட்ட இன அழிப்பில் சிக்குண்ட போதும், கூட்டுறவின் அடிப்படையில் ஒருவரை ஒருவர் ஈந்தும் உதவியும் அந்நிய ஆதிக்கத்தை நிலை தளர வைத்து தமிழ் மக்களிடையே சேமிப்புத் தன்மையையும், அமரர் வீரசிங்கம் போன்றோரால் வழி நடத்திய கூட்டுறவுத் தன்மையையும் பெரிய அளவில் கைகொடுத்ததைக் காணமுடிகிறது"

அமரர் வீரசிங்கத்தின் 30 வது ஆண்டு நினைவு நாளை நினைவு கூரு முகமாக தமிழீழ நிர்வாக சேவை கூட்டுறவுப் பகுதியினர் விடுத்த செய்தியில் மற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அச்செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

பரந்துபட்ட உலகிலே மொழியால், மதத்தால், நிறத்தால் வேறுபட்ட மக்கள் உண்டு. அது போன்று பரந்த பூமியில் கண்டங்களை கடல்கள் துண்டு போடுகிறது. இவைகள் எல்லாவற்றையும் கடந்து மக்களை ஒன்று சேர வைப்பது கூட்டுறவாகும்.

ஐக்கியம், சிக்கனம், குடியாட்சி நெறிமுறைமை, சுயாதீனம் என்ற அடிப்படைக் கொள்கைகளை நிலை நிறுத்துவது கூட்டுறவாகும். ஆகவே இந்தக்கால கட்டத்தில் எமது பிரதேசத்தின் கூட்டுறவின் வழிகாட்டியான அமரர் வீரசிங்கம் அவர்களை நாம் நினைவு கூருவது வரவேற்கத்தக்க செயலாகும்.

## கூட்டுறவுசமுதாயத்தை கட்டிஎழுப்புவோம்

பொருளாதாரத்தில் நலிவடைந்து அதன் உற்பத்திப் பெறுமானத்தை தாம் அனுபவிக்க முடியாத பாட்டாளி மக்கள் முதலாளிகளினால் சுரண்டப்பட்ட காலகட்டத்தில் "சமூக நீதி வழங்கி தொழிற் பிரச்னையை மாற்றிமைத்து, எல்லா நலன்களும் பெற வழிவகுத்து அமரர் வீரசிங்கம் செயல்பட்டார்."

யாழ். மா. கூ. சபைத் தலைவர் திரு. வை. செந்திநாதன் அமரர் வீரசிங்கம

(4ம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவை வாழ்வியலின் அங்கமாகக்கொண்டவர்!

எமது கூட்டுறவுத்துறை வளர்க்கப்படுகிறது என்றால் இத்துறையில் அனுபவமிக்கவர்களின் வழிகாட்டலும், செயற்பாடுகளும் தான் காரணம். அக்காரணிகளை முறையாக தனது வாழ்வியலின் ஓர் அங்கமாகப் பேணிய காரணத்தால், இன்றும் அவர் நினைவு கூரப்படுகிறார்.

இவ்வாறு வடமாகாண ப. தெ. வள அபிவிருத்தி கூட்டுறவு சமாசத்தலைவர் திரு. சா செல்வரத்தினம் அமரர் வீரசிங்கம் நினைவாக தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

அவரைப்போன்று ஒவ்வோர் கூட்டுறவாளரும் தலைமைத்துவப் பண்புகளையும், ஆற்றலையும் வளர்த்து செயற்கரிய காரியங்களைச் செய்து மேலும் கூட்டுறவை வளர்த்து தமிழீழ வரலாற்றில் கூட்டுறவுத்துறையின் சிறப்பை மேன்மையுறச் செய்வதே அப் பெரியாரின் பாதையை முன்னெடுத்துச் செல்கின்றோம் என்பதை உணர்த்தும் என்று உணர்ந்து செயற்படுவோம்.

## தலைமைத்துவத்திற்குத் தளமிட்டவர்!

பாட்டாளி மக்களுக்கு வாழ்வளிக்கவல்ல கூட்டுறவு இயக்கத்தைப் பாராளுமன்றம் வரை குரல் கொடுத்துக் கட்டியெழுப்பியவர். தமிழ்ப் பிரதேசத்திற்கு மட்டுமல்ல சர்வதேச மட்டம்வரை கூட்டுறவுக் கருத்துக்களை நிலைபெறச் செய்து கூட்டுறவு இயக்கத்திற்கும் சிறப்புச் சேர்த்தவர். இப் பணியை விரிவாக்க அகில இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனத்தை உருவாக்கி அதன் முதல் தலைவராக விளங்கி வழிகாட்டியவர்.

முப்பது வருடங்களுக்குப் பிறகும் அவர் நினைவு கூரப்படுகின்றார் என்றால் அப்பெருமகன் எத்தனை சாதனைகளை இந்த மண்ணில் செய்திருக்கிறார் என்பதற்கு இந்த மண்ணில் இன்று இயங்குகின்ற அனைத்துக் கூட்டுறவு நிறுவனங்களும் சான்றாகும். அவர் வழிகாட்டலை ஏற்று நடப்பதுதான் அவருக்கு நாம் செய்கின்ற தேசியக் கடமை எனக் கருதுகின்றேன்.

க. குணராசா பிரதேச செயலரும், பிரதிக்கூட்டுறவு ஆணையாளரும். யாழ்ப்பாணம்.

## வீரசிங்கம் ஒரு கல்விக்களஞ்சியம்

சிறந்த ஆசிரியராய், அதிபராய், பண்புமிக்க கூட்டுறவாளராய் பாராளுமன்ற உறுப்பினராய் சேவையாற்றிய மதிப்புமிக்க இப்பெரியாரின் சேவைகளை இலங்கை மக்கள் பலர் அறிவர். எம்மினத்தவருக்கு இவரது வாழ்க்கை வரலாறு ஒரு கல்விக்களஞ்சியமாகவும் வழிகாட்டியாகவும் அமைகிறது.

வடபகுதியில் கூட்டுறவுத் துறைக்கு வித்திட்டு சிறப்புற செயற்பட்டு வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபையை நிறுவி அதன் மூலம் கூட்டுறவுக் கல்வியையும் அதன் நடைமுறைகளையும் அதன் பண்புகளையும் வளர்த்தெடுக்க இப்பெரியார் வழி அமைத்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் தனித்துவமான பொருளாதாரத்தை எதிர்நோக்க உள்ள எமது பிரதேசத்தில் கூட்டுறவு மாகாணவங்கியையும் மற்றும் கூட்டுறவு அமைப்புக்களையும் மீண்டும் ஆக்கிக்கொள்வதற்கு கூட்டுறவாளர்களாகிய நாம் அனைவரும் அணிதிரளுவோமாக.

க. பஞ்சலிங்கம் (கூ. அ. உ. ஆணையாளர் யாழ்ப்பாணம்.)

## கூட்டுறவுச்சேவை. இலக்கணமானவர்

முழுமையான கூட்டுறவுப் பண்புகளைத் தேடித் திரியும் துர்ப்பாக்கிய நிலையில் நாம் இன்றுள்ளோம். எம் மத்தியில் வாழும், கூட்டுறவில் மெத்தப் படித்துத் தேறிய பண்டிதர்களே திசைமாறி தடம்பிரிந்து செல்லும் நிலையில் முன்மாதிரிகளுக்கு எவரைத் தேடுவது என்று, அல்லலுறும் நிலையில் உள்ளோம். சட்டப் புத்தகங்களை இறுக்கமாகக் கடைப்பிடித்து சாதிக்க முடியாத சவால் மிகுந்த இவ்வுலகத்தின் இன்றுள்ள நிலைக்கு ஈடு கொடுக்கும் கூட்டுறவு வாழ்க்கை முறையை கற்பித்துத் தருபவர்களை தேடி அலையும் இவ் வேளைகளில் முன்னோடித்தத்துவங்களுக்கு கூட்டுறவின் பால்-செயல் வடிவம் கொடுத்து நிலையான வரலாற்றினை தொடரும் பல தசாப்த்தங்களுக்கு எம் முன்னே விட்டுச் சென்றுள்ள "ஐக்கிய தந்தை வீரசிங்கம்" அவர்களை சிரம் தாழ்த்தி நினைவு கூருவோம்.

தி சபாரத்தினம் கூ. அ. உ. ஆணையாளர் (ப / தெ

★ கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கம் 30-வது ஆண்டு நினைவு சிறப்பிதழ் ★

### சிந்தனைச் சுடர்

ஐக்கியம் என்பது ஒன்றாக இயங்குவது. அதற்கு ஆதியும் இல்லை; அந்தமும் இல்லை. அது என்றும் உளது; எங்கும் உளது; அதில் அறிவு வியாபகம். அதன் போக்கு இன்பசுகம்.

அமரர் வி. வீரசிங்கம்

## ஐக்கிய எண்ணம்

### கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கம்

"என்கடன்பணிசெய்து கிடப்பதே" - அமரர் பெரியார் வீரசிங்கம் அடிக்கடி சொல்லும் வார்த்தை இது.

"பணி" செய்வதற்கு அமரர் தேடித் தெரிந்தெடுத்த துறைகளுள் ஒன்று கல்வித்துறை, அடுத்தது கூட்டுறவுத்துறை. இவை இரண்டுமே மிகவும் சிக்கலானதும், கடினமானதுமான துறைகள்.

ஆனால் இவ்விருதுறைகளிலும் அமரர் வீரசிங்கம் ஏழு தஸாபத் தங்களாக சேவை புரிந்து வெற்றி கண்டுள்ளார்.

"நாட்டுயர்வை, கூட்டுறவு ஒன்றினால் தான் கட்டி எழுப்பலாம்" என்ற கூட்டுறவு மந்திரத்தை கடைப்பிடித்த கூட்டுறவாளர்களுள் அமரர் வீரசிங்கம் முதன்மையானவர்.

கல்வித்துறையில் அன்னார் புரிந்த சாதனைகளுக்கு கல்வியில் புகழ் பூத்த மானிப்பாய் இந்துக்கல்லூரி (வீரசிங்கம் பாடசாலை) சகலதுறைகளில் உயர்ந்து நிற்பது சான்றுபகர்வதாய் உள்ளது.

கூட்டுறவுத்துறையிலும் அன்னார் புரிந்த சாதனைகள் பல. கூட்டுறவில் ஏறத்தாள ஐந்து தஸாபத்தங்களாக சேவை புரிந்து, 1920களில் யாழ். மாவட்டத்தில் அன்றைய விவசாயிகளின் பொருளாதார நலிவினை நீக்கி முதலாளிகளின் சுரண்டலில் இருந்து விடுபடச் செய்யபுகையிலை உற்பத்தியை சந்தைப்படுத்துவதற்காக "மலையாளம் புகையிலைக் கூட்டுறவுச் சங்கம்" நிறுவி உற்பத்தியாளர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்க வழிசெய்தார்.

கூட்டுறவு இயக்கத்தை பல்வேறு வழிகளிலும் வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை அகில இலங்கை கூட்டுறவு சம்மேளம் அமைத்து அதன் தலைவராக இருந்து வடக்கையும், கிழக்கையும் கூட்டுறவால் இணைத்த பெருமகன் அமரர் வீரசிங்கம்.

கூட்டுறவுக் கல்வியின் அவசியத்தை உணர்ந்து கூட்டுறவுக் கல்லூரி நிறுவி அதன் மூலம் முழுமையான கூட்டுறவுப் பயிற்சியினை அளித்து கூட்டுறவையும், கூட்டுணர்வையும் வளர வகை செய்தார். 1968ல் நியமிக்கப்பட்ட "மெல்பிட்லோ கூட்டுறவு ஆணைக்குழு" இக்கல்லூரியின் சிறப்பு செயற்பாடு பற்றிவிதந்துரை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கூட்டுறவால் தமிழீழத்தைக்கட்டி எழுப்பமுடியும் என்ற சிந்தனை அன்றே அமரர் வீரசிங்கத்தின் மனதில் முளை விட்டிருந்தது.

அமரர் பெரியார் வீரசிங்கத்தின் சுமார் ஐந்து தஸாப்த்த கால கூட்டுறவுச் சேவையை 30-வது ஆண்டாக நினைவு கூரும் கூட்டுறவாளர்கள் இடிந்த கோபுரமாகக் காட்சியளிக்கும் அவரது நினைவுச் சின்னமான வீரசிங்கம் மண்டபத்தையும், மக்கள் வங்கி உள்வாங்கிய கூட்டுறவு மாகாண வங்கியையும் மீண்டும் நிலைபெறச் செய்ய இத்தினத்தில் திடசங்கற்பம் பூண வேண்டும்.

அவரது தன்னலமற்ற சேவையால் வானுயர எழுந்து நின்ற கூட்டுறவுக் கனவுகளை நனவாக்குவதே இன்றைய கூட்டுறவாளர்களின் தலையாய பணியாகும்.

கூட்டுறவே நாட்டுயர்வு

# இலங்கையில் கூட்டுறவு இயக்கம் சில பிரச்னைகள்

கூட்டுறவைப்பற்றி பேசும் பொழுதெல்லாம், பொதுவாக இலங்கையரும், சிறப்பாக வடமாகாணத்தவரும் பெருமைப்பட்டுக் கொள்வதுண்டு.

ஆசியாவிலே கூட்டுறவு இயக்கம் வேரூன்றிய நாடுகளில் இலங்கையும் ஒன்று என்ற கருத்து பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொன்று. எந்தவொரு இயக்கத்திலும் ஏற்ற, இறக்கங்கள் காணப்படுவதுபோல இலங்கையின் கூட்டுறவு இயக்கத்திலும் நிலைமாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதனை நுணுகி ஆராய வேண்டியது கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டிருப்போரது கடமையாகும்



இன்று உலகரீதியாக கூட்டுறவு இயக்கம் பல முக்கியமான பிரச்னைகளை எதிர்நோக்குகிறது. நவீன கூட்டுறவுச் சிந்தனைகள் இந்தியா, இலங்கை முதலிய நாடுகளில் உருவான போதும், அதாவது சென்ற நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவிலும், இந்த நூற்றாண்டின் முதல் தஸாப்தத்தில் இலங்கையிலும் ஆங்கிலேய ஆட்சியாளரால் கூட்டுறவு இயக்கம் அறிமுகப்படுத்தப்பட்ட பொழுது இருந்த உலக அமைப்பிற்கும், இன்றைய உலக நிலைக்கும் எத்தனையோ வேறுபாடுகள் உள்ளன. ஏகாதிபத்திய நாடுகள் சில உலகின் கணிசமான பகுதியை ஆண்ட காலகாட்டத்தில் கூட்டுறவு இயக்கம் இங்கு முளைவிட்டது.

*வரலாற்று பின்னணி:*

கைத்தொழிற் புரட்சி தோற்றுவித்த முரண்பாடுகளின் விளைவாக சமுதாயங்களிலே ஏற்பட்ட துன்ப துயரங்களை களையுமுகமாக உழைக்கும் மக்கள் மத்தியில் ஐக்கிய நாணய சங்கத்தினடியாக கூட்டுறவு இயக்கம் பரிணமித்து இங்கிலாந்திலே இது ஆரம்பமானாலும், ஜேர்மனி, பிரான்சு முதலிய நாடுகளிலும் அந்நாடுகளின் பொருளாதார; கலாச்சார பண்ணணிகளுக்கேற்ப, வெவ்வேறு இயல்புகளைப்பெற்றது.

ஐரோப்பாவில் கைத்தொழிற்புரட்சி உதவேகம் பெற்ற வேளையில் உதயமாகிய கூட்டுறவு இயக்கம் அதே ஐரோப்பிய நாடுகளில் பலகைத்தொழிற் பண்ணிலை வளர்ச்சியை அடைந்துவிட்ட வேளையிலும் பொருத்தமுடையதாகவே உள்ளது.

கூட்டுறவு என்ற கருத்துப்படிவம், காலத்தோடு ஒட்டி வளரும் பெற்றியுடையதாக இருப்பதினால் கூட்டுறவின் பண்பும், பணியும் பற்றி பொருளியலாளரும், சமூகவியலாளரும், வளர் முகநாடுகளில் பொருளாதார அபிவிருத்தியில் கூட்டுறவு இயக்கம் எத்தகைய பங்கினை வகிக்கலாம் என்று மதிப்பீடு செய்யும் அதிகாரிகள் கூட்டுறவை விமர்சித்திருக்கிறார்கள். கூட்டுறவு என்னும் கோட்பாட்டை நுண்ணிய ஆய்விற்கு உட்படுத்தி அதன்பலவீனங்களை எடுத்துரைத்திருப்போரும் உள்ளனர்.

*இலட்சிய தார்மீகமும் நடைமுறைப் பயன்பாடும்:*

கூட்டுறவு, அடிப்படையில் இரு முக்கிய அம்சங்களைக் கொண்டது. ஒன்று அதன் இலட்சியதார்மீக அம்சம், மற்றொன்று அதன் நடைமுறைப் பயன்பாட்டு அம்சம். இன்றைய உலகில் கூட்டுறவு இயக்கம் இவ்விரு அம்சங்களையும் வேண்டியுள்ளது, தன்னிச்சையாக இயங்கும் நிறுவனமாக கூட்டுறவு இருக்கக்கூடிய சூழ்நிலைகளிலே கூட்டுறவாளர்கள் அதன் இலட்சிய - தார்மீக அம்சங்களை முதன்மைப்படுத்துவர் அரசாங்கங்களின் கட்டுப்பாடு, சட்டத்திட்டங்களால் வழிநடாத்தப்படும் கூட்டுறவாளர்கள் அதன் செயமுறை அம்சங்களை சிறப்பாக வற்புறுப்பர். முன்னவர்களுக்கு கூட்டுறவு இயக்கத்தின் முடிவும் விளைவும் முக்கியம். பின்னவர்களுக்கு அது வழிவகையாகவே அமைகிறது. ஆயினும் உற்று நோக்கினால் இரண்டு அம்சங்களும் ஒன்றுக்கொன்று அனுசரணையானவை என்பது புலப்படும்.

*இலட்சியவாத மனோபாவம்:*

கூட்டுறவின் இலட்சியவாத நோக்கமுடைய அது எழுந்த காலத்து சமுதாயவியற் சந்தர்ப்பங்கள் சில ஏதுக்களாய அமைந்தன. இங்கிலாந்திலும், வேறு சில ஐரோப்பிய நாடுகளிலும் 19ம் நூற்றாண்டிலே மகிழ்ந்த கற்பனாவாத சோஷலிஷம் கூட்டுறவாளர்களின் உணர்வுகளை குறிப்பிடத்தக்க அளவு பாதித்தது. பெரும்பாலான கற்பனாவாத சோஷலிஸ்டுகள் முதலாளித்துவ அமைப்பையும், அரசையும் ஏற்றுக் கொண்டவர்கள். சொத்துரிமை, தொழிற் போட்டி என்பன சமுதாயத்திற்கு இயல்பானவை என்று கருதினர். சரியான விநியோகம், ஒத்துழைப்பு இன்மையாலும், உற்பத்திக்கும் நுகர்வுக்குமிடையே சமநிலையாலும் வறுமையும், இடும்பையும், சமுதாயத்தில் நிலவுவதாக அவர்கள் எண்ணினர். இதனால் மக்கள் ஒற்றுமைப்பட்டு கூட்டுறவு மார்க்கத்தைக் கைக்கொள்வதன்மூலம் சமத்துவமான பொதுவுடமைப் பண்பு வாய்ந்த ஒரு சமுதாயத்தை நிர்மாணிக்கலாம் என்று கூறினர்.

கூட்டுறவின் இலட்சிய வேகத்தை ரஷ்யப் புரட்சியாளர், "குரொப்பொட்கின்" எனபவரின் "பரஸ்பர உதவி" என்னும் நூலில் "சமூக உணர்வுகளும் சிறப்பாக நீதி, நியாயம் பற்றி பழக்கமான பொதுமனப்பாங்கில் அமைந்த ஒரு கூட்டுணர்வும் ஒத்திசைவான அளவு வளர்ச்சியடையாவிட்டால் சமுதாயங்களிலே வாழ்தல் முற்றிலும் இயலாததாகிவிடும்" என்று கூறப்பட்டுள்ளது. கூட்டுறவாளர்களினால் அடிக்கடி எடுத்துக்காட்டப்படும் இம் மேற்கோள் கூட்டுறவின் சமூகப் பண்பினைத்துலக்கிக் காட்டுகிறது.

(வளரும்)

1974-இல் இலங்கை பல்கலைக் கழக யாழ்ப்பாண வளாகத்தின் 1வது தலைவராக இருந்த அமரர் பேராசிரியர் க. கைலாசபதி மறைந்து ஆண்டுகள் 12 ஆனபோதும் அவரது அன்றைய கூட்டுறவு சிந்தனைகள் இன்றும் பொருத்தமுடையதாகவே காணப்படுகின்றது. கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கத்தின் கூட்டுறவுக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டவர்களுள் பேராசிரியரும் ஒருவர். அவரது 12 வது நினைவுதினம் 6-12-1994 ஆகும். அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

## கூட்டுறவுக் கொள்கைகள்

### கூட்டுறவுச் சங்கங்களிடையே கூட்டுறவு

"அனைத்துக் கூட்டுறவு அமைப்புக்களும் தத்தமது அங்கத்தவர்களதும், அவர்களது சமூகத்தினது எதிர்பார்ப்புகள் தொடர்பான சிறந்த சேவையினை வழங்குவதற்காக உள்ளூர், பிரதேச, தேசிய, சாவதேச அடிப்படையிலான எல்லா கூட்டுறவு அமைப்புக்களுடனும் நடைமுறை ரீதியிலான எல்லா வகைச் செயற்பாட்டுடனும் கூடிய ஒத்துழைப்பை ஏற்படுத்துக் கொள்ளுதல் வேண்டும்" என பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

கூட்டுறவுக் கொள்கைகளில் முதல் இரண்டு கொள்கைகளும் நிர்வாகம் சம்பந்தப் பட்டதாகும். அடுத்தஇரண்டு கொள்கைகளும் நிதி பற்றியதாகவும், இறுதி இரண்டு கொள்கைகளும் அமைப்பு பற்றியதாகவும் இருக்கின்றதை நாம் உணர முடியும். இறுதியான கொள்கை "கூட்டுறவு நிறுவனங்களிடையே கூட்டுறவு" என்ற ஒரு பெரும் தத்துவத்தினை உள்ளடக்கி இருக்கின்றது.

இன்று கூட்டுறவு நிறுவனங்கள் எந்த வகைப் பொருளாதார அமைப்பைக் கொண்ட நாடாக இருந்தாலும் சரி அவை தமது செயற்பாட்டு அபிவிருத்திக்காக ஒன்றிணைதல் அல்லது கூட்டுச் சேர்தல் என்பது அவற்றின் வலுவை அதிகரிக்கும் என்ற உண்மைநிலையினை நோக்காகக் கொண்டுஇக்கொள்கை பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. இவ்வாறான ஒன்றிணைவு அல்லது கூட்டுசேர்தல் அல்லது ஒத்துழைப்பு என்பது கூட்டுறவு நிறுவனங்களின் அபிவிருத்திக்கு மிக அத்தியாவசியமானது ஆகும்.

— வீ. கே. சிவராஜசுந்தரம் —

(கல்விப்பயிற்சி அளிப்பு உத்தியோகத்தர் யா. மா. கூ. சபை)

கூட்டுறவு நிறுவனங்கள் இடையே ஒத்துழைப்பு இருக்க வேண்டும். போட்டி, பொறாமை மனப்பான்மையுடன் கூட்டுறவு நிறுவனங்கள் செயற்படக் கூடாது. இத்தகைய ஒத்துழைப்பு என்பது தமது உறுப்பினர்களினதும் அவர்களது சமூகத்தினதும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றக் கூடியதாக அமைய வேண்டும். சிறிய சிறிய கூட்டுறவு அமைப்புக்கள் ஒன்றிணைந்து செயற்படும்போது பாரிய பொருளாதார வலுவுடைய அமைப்புக்களாக மாற்றமடைய முடியும்.

உள்ளூர், பிராந்திய, தேசிய சர்வதேச மட்டத்தில் ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலம் கூட்டுறவுத்துறை எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும் கூட ஒன்று சேர்ந்து தீர்த்துக் கொள்ள வழி ஏற்படும். இதனால் போட்டிப் பொருளாதார அமைப்புகளில் "கூட்டுறவு அமைப்பு" முதலாளித்துவ பொருளாதாரத்தினால் மறைக்கப்பட்டு விடாது அவற்றுடன் போட்டியிடக் கூடிய வலுவுள்ள அமைப்பாகசெயற்படும். தன்மையையும் உருவாக்கிக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது.

கூட்டுறவுக் கொள்கைகளில் ஆறாவது கொள்கையான "கூட்டுறவு நிறுவனங்களிடையே கூட்டுறவு" என்னும் கொள்கை இலகுவாக பிரசுரமாகியுள்ளது.

எனவே இவ் ஆறாவது கொள்கையானது கூட்டுறவு அமைப்பு நிலையாக இருக்கவும். தொடர்ந்து அபிவிருத்தியடையவும் வழிகோலும் வகையில் அமைப்பின் முக்கியத்துவத்துவம் கருதி பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு முக்கியமான கொள்கை ஆகும்.

"மனிதகுலம் தனது வாழ்வுத் தேவைகள் முழுவதையும் நிறைவேற்றக கூட்டுறவுக் கொள்கைகள் காட்டும் வழியைப் பின்பற்றிப் பயன் பெறமுடியும் தொடர்ந்து பின்பற்றுவது தனி மனிதனுக்கும் சமுதாயத்துக்கும் நலத்தைக் கொடுக்கும். இக்கொள்கையின் வழிகாட்டல்கள் சமுதாய ஏற்றத் தாழ்வுகளையும், சமூக அநீதிகளையும் சுரண்டலையும் ஒழித்து நீதியும் அறமுஞ் சார்ந்த பொதுநல சமுதாய அமைப்பொன்றை உருவாக்க இக் கொள்கைகள் வழி வகுக்கும்.

— றொபேர்ட் ஒவன் —

## பரீட்சை முடிவுகள்

யாழ்மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரியில் 94 செப்ரம்பர் மாதம் நடைபெற்ற முகாமைத்துவம் தொடர்பான உயர்தர தேசிய சான்றிதழ் பாடநெறிப்பரீட்சையில 2ம் பிரிவில் 3பேரும், 3ம் பிரிவில் 20 பேரும் சித்தியடைந்துள்ளதுடன் 07 பேர் நூனசித்தி அடைந்துள்ளனர்.

கூட்டுறவுப் பணியாளர்கள் தராதரப்பத்திர சாதாரண பிரிவுப் பயிற்சிநெறிப்பரீட்சையில் 1ம் பிரிவில் ஒருவரும், 2ம் பிரிவில் 10 பேரும், 3ம் பிரிவில் 19 பேரும் சித்தியடைந்துள்ளதுடன் 5 பேர் நூனசித்தி அடைந்துள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

"கூட்டுறவு என்பது வியாபாரம், ஒழுக்கம் ஆகிய இரு துறைகள் சம்பந்தப்பட்ட அளவில் ஒருமுதியோர் கல்வித் திட்டமாகும். ஆகவே அதன் வெற்றிற்கு இரு விஷயங்கள் இன்றியமையாதவை. பயனுறுதியுடைய போதனை; தகைத்திறமுடைய மேற்பார்வை."

பர்மா கூட்டுறவுப் பதிவாளர்,

# அமரர் கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் 30-வது ஆண்டு நினைவுமலர்

**5 - 12 - 1994**

## அமரர் பெரியார் வீரசிங்கம் கூட்டுறவின் ஒளிவிளக்கு !

யாழ் மாவட்டத்தின் கூட்டுறவு வரலாற்றிலே அன்று தொடக்கம் இன்றுவரை கூட்டுறவின் அணையாத தீபமாக ஒளிர்ந்து கொண்டிருப்பவர் அமரர் விஸ்வலிங்கம் வீரசிங்கம், 1920-ஆம் ஆண்டளவில் கல்வியிலே தன்னை இணைத்து மானிப்பாய் இந்துக் கல்லூரியிலே ஆசிரியராகவும், அதிபராகவும், பழைய மாணவர் சங்க தலைவராகவும் கடமையாற்றி மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக அளப்பரிய பணிகளை ஆற்றி வந்தார்.

இவர் பகவத் கீதையை படித்து அதன் வழியே தன் வாழ்க்கையை அமைத்து "உண்மை பேசு, பிறருடைய உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடு" போன்ற தத்துவங்களை தனது வாழ்க்கையின் குறிக்கோள்களாகக் கொண்டு ஒழுகி பிறரையும் தன்வழியே வாழ வழிகாட்டினார்.

1920-களில் இவரதும், இவருடன் இணைந்து செயல்பட்டோரினதும் தீவிர மது ஒழிப்புப் பிரச்சார முயற்சியினால் யாழ். குடாநாட்டில் ஒரு தவறணை கூட இல்லாது ஒழித்து வெற்றி கண்டார். மீன்பிடி ஆலோசனைச் சபையின் அங்கத்தவராக இருந்து கடற்தொழில் அபிவிருத்திக்கும் தொழிலாளர்களின் மேம்பாட்டுக்கும் அளப்பரிய சேவையாற்றினார்.

பெரியாரது அயராத முயற்சியின் பயனாக 1929 இல் யாழ். மாவட்டக் கூட்டுறவு வங்கி ஸ்தாபிக்கப்பட்டது. மேலும் இவர் வடபகுதி கூட்டுறவாளர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து கூட்டுறவுச் சங்கங்களின் ஆலோசனைக்கும், அபிவிருத்திக்கும், பிரச்சாரத்துக்குமாக 1937-ல் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையினை ஆரம்பித்து இச் சபையின் தலைவராக தெரியப்பட்டார். சிறந்த தலைமைத்துவத்தினால் இறக்கும் வரை தலைவராகவே சேவையாற்றியமை குறிப்பிடத்தக்கது.



வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை இலங்கையின் கூட்டுறவு இயக்கத்துக்கே எடுத்துக்காட்டாக, தனது மகத்தான பணிகளை வடபகுதிக்கு மட்டுமல்லாமல் கிழக்குப் பகுதிக்கும் ஆற்றியது. இச் சபையினால் கூட்டுறவு உபபரிசோதகர்களுக்கான பயிற்சி நெறி, க/குப்பதிவாளர் சேவைகள், ஆலோசனைச்சேவைகள் என்பன மேற்கொள்ளப்பட்டதுடன் 1952-ல் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள், பணியாளர்கள் ஆகியோரைப்பயிற்றுவிப்பதற்காக கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி இவரால் ஆரம்பிக்கப்பட்டது.

- பொ. சண்முகசுந்தரம் -
அதிபர் யா. மா. கூ. ப. கல்லூரி

இன்று வெளிவந்து கொண்டிருக்கும் "ஐக்கிய தீபம்" என்னும் பத்திரிகையும் முன்னர் வெளிவந்த "கூட்டுறவாளர்" (கோப்பறேற்றர்) என்னும் ஆங்கில பத்திரிகையும் கூட்டுறவு இயக்கத்தின் பிரச்சாரத்துக்காகவும், வி. வாக்கத்துக்காகவும் வெளியிடப்பட்டது.

1952 ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட காலத்திலே கல்வி, தொழில்கல்வி சிறுகைத்தொழில், கூட்டுறவு, வைத்தியம் ஆகிய துறைகளின் மேம்பாட்டுக்காக தொண்டாற்றி சங்கானை வைத்தியசாலையையும் நிறுவினார். பாராளுமன்றத்தினால் கூட்டுறவுத் துறையின் செயற்பாடுகள், குறைபாடுகள் அபிவிருத்தி என்பன பற்றி ஆராய்வதற்காக 1953, 1954 ஆம் ஆண்டுகளிலே நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவுக்கு தலைவராக நியமிக்கப்பட்டு முனைப்புடன் செயலாற்றினார். அவர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைகள் இன்றும் அறிஞர்களால் போற்றப்பட்டு வருகின்றது.

இலங்கையில் கூட்டுறவுப் பயிற்சியை மேற்கொள்ளும் மாணவர்களுக்கும், கூட்டுறவாளர்களுக்கும் கூட்டுறவுத் தத்துவங்களையும் நடைமுறைகளையும் அறிந்தும்

(4ம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றில் அமரர் வீரசிங்கம் ...

செயல் முறைக்கல்விக்காக பயிற்சிக் கல்லூரிகளையும் கனிஷ்ட தொழில் நுட்பக்கல்லூரிகளையும் வைத்திருக்க வேண்டும். இவை உண்மையாகத் தேவைப்படுகின்ற இடங்களில் இத் தொழில் நுட்பக்கல்லூரிகளை அமைக்கவேண்டுமென நான் விரும்புகிறேன். இத்தகைய தொழில் நுட்பக்கல்லூரிகளினால் இளைஞர்கள் நன்மை அடையும் வாய்ப்புண்டு. யாழ்ப்பாணத்தில் பெருந்தொகையான கற்ற இளைஞர்கள் பலர் வீணே திரிந்து மற்றவர்களுக்கு விசித்திரமான தத்துவங்களைப் போதித்துப் சமுதாயத்தைப் பாழாக்கிவருகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் கல்வித்திணைக்களம் தொழில் நுட்பக் கல்லூரிக்குக்காணி வாங்கியுள்ளது. எவ்வளவு சீக்கிரம் யாழ்ப்பாணத்தில் தொழில் நுட்பக்கல்லூரி தொடக்கப்படுகிறதோ அவ்வளவுக்கு அது நன்மைபயக்கும். அது யாழ்ப்பாணத்துக்குத் தான் நன்மையென்று சொல்லவில்லை. முழுநாட்டுக்கும் நன்மைபயக்கும். (பாராளுமன்றப் பதிவேடு ஆகஸ்ட் 13, 64)

### இரண்டாவது மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் பற்றி

"உண்மையில் நாம் எங்களுடைய ஆங்கிலம் கற்பித்தலில் வளர்ச்சி காணவேண்டும். அப்போது தான் நாம் எமது தேசியக் கொள்கைகளை அடைய முடியும். எமது சுதந்திரத்தை வெற்றியுடைய தாக்கலாம்.

இதனை நடைமுறைப்படுத்த ஆங்கிலம் படிப்பிப்பதற்கு விசேடமாக ஆசிரியர்கள் பயிற்றப்படுகின்றதை நாம் உறுதிசெய்ய வேண்டும். இங்கிலாந்தில் வெளிநாட்டு ஆசிரியர்கள் திறமையாக ஆங்கிலம் படிப்பிக்க பயிலுவதற்கு நிறுவனம் வைத்திருக்கிறார்கள். அந் நிறுவனங்களிடம் இருந்து நாம் ஆலோசனை பெற்று அவ்வாறான நிறுவனம் அமைப்பதற்கு அவர்கள் எங்களுக்கு உதவலாம். அரசின் ஆறாண்டுத் திட்டத்தில் அவ்வாறான பயிற்சி நிறுவனம் நிறுவப்படுதலும் உள்ளடக்கப்பட வேண்டுமென நான் விரும்புகிறேன். அது அத்தியாவசிய தேவையுமாகும்.

பாராளுமன்றப் பதிவேடு 1955 ஆகஸ்ட் 15

## சுரண்டலில் இருந்து விடுவித்தவர்

அமரர் வீரசிங்கத்தின் கூட்டுறவுச் சிந்தனைகள், அவர் ஆரம்பித்துவைத்த கூட்டுறவு அமைப்புகள் காலத்தின் தேவையை ஒட்டியே ஆரம்பித்து வைக்கப்பட்டவையாகும். எனவே அவற்றைப் பேணிப் பாதுகாக்கவேண்டியது ஒவ்வொரு கூட்டுறவாளர்களினது தலையாய பணியாகும்.

பொருளாதாரத்தில் நலிவுற்றிருந்த வறிய மக்களை முதலாழிமார்களின் சுரண்டலில் இருந்து காப்பாற்றி அவர்களது புகையிலை உற்பத்திகளை சந்தைப்படுத்த மலையாளம் புகையிலை உற்பத்தியாளர் சங்கம் ஆரம்பித்து வைத்து நல்ல வருமானம் பெற்றுக் கொடுத்ததை நாம் மறக்க முடியாது.

— திரு. ச. செல்வரத்தினம் —
(யாழ். மா. விவ. உற். சந். நுக கூ. சங்கங்களின் சமாசம்)

## மக்கள் மனங்களில் நிற்பவர்!

"வடபகுதியின் புகழ்பூத்த கூட்டுறவாளரான அமரர் வீரசிங்கம தனது கல்விப் பணியுடன் கூட்டுறவுப் பணியையும் சிறப்புற ஆற்றி மக்கள் மனங்களில் குறிப்பாக கூட்டுறவாளர் மனங்களில் நிரந்தர இடம் பிடித்துள்ளார்"

அமரர் வீரசிங்கத்தின் கூட்டுறச் சின்னங்கள் குறிப்பாக வீரசிங்கம் மண்டபம் புனரமைப்புச் செய்யப்பட்டு பாதுகாக்கப்படவேண்டும். இதுவே கூட்டுறவாளர்கள் அவருக்குச் செய்யக் கூடிய கைமாறாக இருக்க முடியும்.

இ. பொ. குமாரசுவ மிமுன்னாள் நல்.பல.நோ.கூ.ச.தலைவர்

## கூட்டுறவு மேதை கலைஞானி வீரசிங்கம் வாழி !

கல்வியிலே வித்தகனாய் கலைகளிலே
கவின்நாட்டம் கொள்பவனாய்க் கூட்டுறவு
நல்விதமாய் பரப்பவழி உருவாக்கி
நாட்டினிலே ஐக்கியநற் றீப ஏடு
சொல்லரிய ஒற்றுமையின் சோபிதமும்
செயல்வீரம் காட்டினான் வீரசிங்கம்
நல்ல நல்ல கூட்டுறவு ஸ்தாபனங்கள்
நலம்பெறவே படைத்த வீரசிங்கம் வாழி.

மானி இந்துக் கல்லூரி அதிபராக
மன்னிடுகல் விச்சேவை புரிந்த ஆசான்
தேனின் இனித் திடும்பேச்சு திண்மை நிறை
தெய்வீக சிந்தனையும் நாட்டுப் பற்றும்
ஞானமிகு ஐக்கியத்தை நாட்டில் காண
ஞாலமதல் பெருஞ்சேவை செய்த தொண்டர்
மோனமிகு கூட்டுறவு வளர்த்து வந்த
மேதை கலை ஞானி வீரசிங்கம் வாழி.

விவசாயம் மேலோங்கச் சேவை செய்தார்
மலையாளப் புகையிலைச் சங்கம் வைத்தார்
தவமாக வடஇலங்கைக் கூட்டுறவு
தரும்நல்ல மேற்பார்வை சபை யமைத்தார்
நவமான கூட்டுறவுக் கல்லூரியை
நலம்பெறவே அமைத்துப் பல் ஏடு தந்தார்
புவிமீது பாராளுமன்றம் தன்னில்
பெரும்சேவை செய் வீரசிங்கம் வாழி.

எத்தனை எத்தனை கூட்டுறவு
எழில்மிகு சேவைஆற்றினரே
வித்தகஞ் சேரும் ஏடான
ஐக்கிய தீபம் ஏற்றிவைத்தார்
இத்தரை மீதில் இவனைப்போல்
இயங்கிடு சேவை யார்செய்தார் ?
முத்தமி ழறிஞன் வீரசிங்கம்
மேதினிதனிலே வாழியரோ.

— கவிமாமணி

## அமரர்பற்றி இவர்கள் . . .

அமரர் வீ. வீரசிங்கம் கூட்டுறவால் உயர்ந்தாரா, அல்லது கூட்டுறவு அமரர் வீரசிங்கத்தால் உயர்ந்ததா என்று யாராவது கேட்டால் அமரர் வீரசிங்கத்தால் தான் கூட்டுறவு உயர்ந்தது என்று நான் கூறுவேன். அமரர் வீரசிங்கம் ஒரு நடமாடும் கூட்டுறவுப் பல்கலைக்கழகம். கூட்டுறவால் அவர் சாதித்தவை ஏராளம். அவரின் கூட்டுறவுத் தன்மை காலத்தால் அழியாதவை.

அமரர் க. கைலாசபதி (தினகரன் ஆகஸ்ட் 1980)

அமரர் வீ. வீரசிங்கம் கல்வித்துறையிலும், அதே நேரம் கூட்டுறவுத் துறையிலும் பிரபல்யமடைந்து காணப்பட்டார். எந்தப் பிரச்னையையும் ஒரு தீர்வுக்குக்கொண்டு வருவதற்கு தனது சிநேகபூர்வமான பங்களிப்பை அளிப்பதன்மூலம் எல்லோருடைய மனங்களிலும் நிலைத்துள்ளார்.

பீற்றர்கெனமன் (பாராளுமன்ற பதிவேடு மே 1965)

## அமரரின் வழியில் நாம் . . .

வடமாகாணத்தில் கூட்டுறவுத்துறை வளர்ச்சியடைய அமரர் ஆற்றிய தொண்டினால் அவர் கூட்டுறவுத் தந்தை என மதிக்கப்படுகிறார்.

இவர் பராளுமன்றத்தில் இருந்த போது கூட்டுறவுக்காகக் குரல் கொடுத்தவர். இவர் வளர்த்தெடுத்த கூட்டுறவு நிறுவனங்கள் இன்றைய போர்க்காலச் சூழலில் மகத்தான பணியாற்றி வருகின்றன.

அமரர் வீரசிங்கம் மண்ணில் பிறந்த நாங்கள் கூட்டுறவின் 7 வர்ணக் கொடியைத்தாங்கிச்செல்ல உறுதி பூணுவோம்

மா. செல்வராசா
தலைவர், மானிப்பாய்
பல. நோ. கூ. சங்கம்.

## கூட்டுறவாளர் போற்றும் நாயகன்

"அமரர் வீரசிங்கம் அவர்களின் நூற்றாண்டு விழாக் கொண்டாடப்படும் இக்கால கட்டத்தில் கூட்டுறவாளர்களினால் போற்றப்படத்தக்கதாக அவருடைய சேவைகள் அமைந்துள்ளன."

அமரர் வீரசிங்கம் கூட்டுறவுத்துறையில் மட்டுமின்றி கல்வித்துறையிலும் 30 வருடமாக மானிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபராயிருந்து சேவைஆற்றினார்.

மனிதன் மனிதனாக வாழ்வதற்கு சமுகத்தில் கூட்டுறவு அவசியம் என்ற கருத்தை வலியுறுத்தி கூட்டுறவுக்காகவும், கல்விப்பணிக்காகவும் தன் வாழ்நாளை அர்ப்பணித்த வீரசிங்கம் வழியில் நாமும் செயல்படுவோம்.

அவர் பணிகள் வளர அவரது நினைவாக மிளிரும் கூட்டுறவுச் சின்னங்களை கூட்டுறவாளர் பாதுகாக்க வேண்டுமென ஆசிகூறி வாழ்த்துகிறேன்.

சி. தேவராஜன் (அதிபர் மானிப்பாய் இந்துக்கல்லூரி)

## கூட்டுறவாளர் பலரை உருவாக்கினார்!

" யாழ். மாவட்ட கூட்டுறவுத்துறை அமரர் வீரசிங்கம் அவர்களினால் முன்னேறியது என்று கூறினால் மிகையாகாது. அமரரவர்கள் சக்தி மிக்க பல கூட்டுறவாளர்களைத் தோற்றுவித்ததுமின்றி யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையை உன்னத நிலைக்கு உயர்த்திய பெருமையும் அவரையே சாரும் "

இவ்வாறு முன்னாள் ஐக்கிய நாணய சங்கத்தலைவர் திரு. வீ. க. சுப்பிரமணியம் விடுத்துள்ள ஆசிச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது ஐக்கிய நாணய சங்கம் இன்று உயர்ந்த நிலையில் இருப்பதே அவருக்கு நாம் கொடுக்கும் மதிப்பாகும் அவரின் ஞாபகார்த்தமாக மிளிர்த்த வீரசிங்கம் மண்டபத்தை புதுப்பிக்க கூட்டுறவுச் சபை முயற்சி எடுக்க வேண்டும் இது அவருக்குச் செய்யும் கைமாறாகும்.

## கூட்டுறவுத் தந்தை பெரியார் வீரசிங்கம்

வட பகுதியில் கூட்டுறவு இயக்கம் வளர்ந்து முக்கிய இடம் வகித்தமைக்கு காரணமானவர்களில் பெரியார் வீரசிங்கம் அவர்கள் முதன்மையானவர். அவர் நாடாளுமன்றத்தில் பிரதிநிதியாய் இருந்தபோதும் அரசியல்வாதியாய் இல்லாமல் கூட்டுறவாளனாய் விளங்கியமையால் நாடாளுமன்றத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் சம்பந்தமான சர்ச்சைகள் எழும்போது பெரியார் வீரசிங்கத்தின் ஆலோசனைகளை நாடுவார்கள்.

அவரது நேர்மையும், ஒழுக்கமும், சேவை மனப்பான்மையுமே அவரை இந்த முதன்மை நிலைக்கு உயர்த்தியது இப்பெரியாரின் கூட்டுறவுச்சேவை என்றென்றும் வாழும் என வாழ்த்துகிறேன்.

மா. கனகசபை (கூ. அபி. ஆணையாளர், யாழ்ப்பாணம்.)

## அமரர் வழியில் நேர்மையுடன் நாம் செயற்படுவோம்

யாழ். மாவட்டத்தில் கூட்டுறவு விருட்சத்திற்கு நீரூற்றி, உரமிட்டு, வேலியிட்டு வளர்த்தவர் கூட்டுறத் தந்தை அமரர் வீரசிங்கம் கூட்டுறவுத்துறையில் இவர் புரிந்த கடமைக்கு நிகர் இவரே யாவார். கூட்டுறவு மனப்பான்மை இவர் உதிரத்துடன் கலந்ததொன்றாகும். பெரியாரது சரியானவற்றை விரைந்து செய்யும் துணிச்சலும் பிழையானவற்றை நிராகரித்தலுமான சிறந்த பண்பு கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டுள்ள அனைவரையுமே இப்பெரியாரை நினைவு கூரச் செய்கின்றது.

இவ்வாறு யாழ். மா சி. க. கூ. சங்க சபைத்தலைவர் திரு எஸ். முருகநேசன் விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

அமரர் வீரசிங்கம் அவர்கள் எம்மத்தியில் இல்லாது போனாலும் அவரது போதனைகள், சாதனைகள் எமக்கு என்றென்றும் வழிகாட்டும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை அவர் கனவுகள் நனவாக நலிந்து போய்க்கொண்டிருக்கும் கூட்டுறவுத்துறையை மேலோங்கச் செய்வதற்கு அவர் காட்டிய வழியில்சென்று நேர்மையுடனும், நல்லொழுக்கத்துடனும் செயற்பட வேண்டியது கூட்டுறவாளர் ஒவ்வொருவரினது கடமையாகும்.

## கூட்டுறவுக் கல்லூரி நிறுவ வேண்டும்!

1940ல் கோப்பாயில் ஆரம்பிக்கப்படவிருந்த ஐக்கிய நாணய சங்கக் கூட்டத்தில் வீரசிங்கம் ஐயா அவர்கள் கலந்து கொண்டு அங்கு கூடியிருந்த அங்கத்தவர்களுக்கு விளக்கமளித்து ஐயங்களைப் போக்கியமையால் 5 ஐக்கிய நாணய சங்கங்களை உருவாக்க முடிந்தது.

கூட்டுறவுச் சின்னமாக மிளிர்ந்த வீரசிங்கம் மண்டபம் இன்றுபாதிக்கப்பட்டு பற்றைக் காடாகக் காட்சி அளிக்கிறது. இதனைப்புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுப்பதுடன், இம் மண்டபத்திற்கு மேற்குப்புறமாக உள்ள காணியில் கூட்டுறவுக்கலாசாலை அமைக்க 1972ல தீர்மானமானது என்பதையும் அமரரின் நினைவு தினமான இன்றைய தினம் நினைவு கூரத்தக்கது.

க. இ. குமாரசாமி கூட்டுறவாளர்.

## கூட்டுறவு சிங்கமெனத் திகழ்ந்தார்!

அமரர் வீரசிங்கம் அவர்கள் தனது கூட்டுறவுச் சேவையை மாவட்ட, மாகாண தேசியமட்டம் வரை விரிவுபடுத்தி இத்துறையின் வளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றியவர். அவரது கூட்டுறவுச் சேவையில் குறிப்பாக வட மாகாணம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வளர்ச்சிக்கும் அதன் அங்கத்தவர்களின் விருத்திக்கும் பாராளுமன்றம் வரை குரல் எழுப்பியதை இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவுகூருகின்றோம் கூட்டுறவுச் சிங்கமென போற்றப்படும் அவரது கூட்டுறவுப் பணியை நினைவு கூரும் இச் சிறப்புமலர் சிறப்புற எமது ஆசியை மகிழ்ச்சியுடன் வழங்குகிறோம்.

மு. இராஜாராம் ( பொதுமுகாமையாளர், வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.)

## சீனிக்கு தட்டுப்பாடு

பல நோ. கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடந்தநவம்பர் மாதத்தில் இருந்து யாழ். செயலகம் சீனி வழங்காததால் சங்கங்களில் சீனிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை தனியார்கடைகளில் கிலோ 55 ரூபா முதல் 60ரூபாவரை சீனி விற்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## கூட்டுறவு பண்பினை பின்தொடர்வோம்

கூட்டுறவில் கொள்கை வழி நின்று கூட்டுறவு இயக்கத்தை வழிநடத்தி, கூட்டுறவுத்தலைமைத்துவத்தின் இலட்சிய புருஷராக விளங்கிய கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் கூட்டுறவுச் சேவையில் நாம் பின்பற்றவேண்டிய அம்சங்கள் பலவுள்ளன.

கூட்டுறவுக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து அதன் மூலம் கூட்டுறவை இம்மண்ணில் வேரூன்றி கிளைவிட்டு நிழல்தரு பெருவிருட்சமாக வளர்த்த பெரியாரை நன்றியுடன் நினைவு கூரும் இவ்வேளையில் அவரது கூட்டுறப் பண்புகளை பின்தொடர்வோம்.

சு. சிவசுப்பிரமணியம் செயலாளர், மா. கூ. சபை

## தலைமைத்துவத்தை உருவாக்கினார்!

வட தமிழ் ஈழத்தினை உள்ளடக்கியதான பிரதேசத்தின் கூட்டுறவு வளர்ச்சிக்காக தோற்றுவிக்கப்பட்டு 1937-07-20 திகதியில் 975 எண்ணிணைக்கொண்டு பதிவு செய்யப்பட்ட Nothern Division Co o erat ve Federation ) வடபகுதிஐக்கிய மேற்பார்வைச் சபையின் தன்னிகரில்லாத் தலைவனாக பல்லாண்டு சேவையாற்றிய கூட்டுறவின் வித்தகன் அமரர் வீரசிங்கம் அவர்கள்.

பெரியார் வீரசிங்கம் அவர்கள் கூட்டுறவுக் கல்வியின் வளர்ச்சிக்காக சபையினால் யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கல்லூரியை ஆரம்பித்தும், ஐக்கிய தீபம் பத்திரிகை வெளியீடு மூலம் கூட்டுறவுத் தத்துவங்களை மக்கள். மத்தியில் விதைத்து கிராமங்கள் தோறும் தலை சிறந்த கூட்டுறவுத் தலைமைகளை உருவாக்கினார்.

" கூட்டுறவே நாட்டுயர்வு "

மு. க. முருகையா கூ. அ. உ. ஆணையாளர் யாழ்ப்பாணம்.

அமரர்

தெரிந்தும் கொள்ளும் வகையில் 1 50-ஆம் ஆண்டு " கூட்டுறவுத் தத்துவங்களும் செயல்பாடுகளும் " (Practisce An Philosaphy of Co Copere tion) என்னும் ஆங்கில நூலை எழுதி இலங்கையில கூட்டுறவு சம்பந்தமான முதலாவது நூலை உருவாக்கியவர் என்ற பெருமைக்குரியராகி மாணவர்களுக்கும், கூட்டுறவாளர்களுக்கும் ஒளி விளக்காய் திழ்கந்தார்.

தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற இவர் இலங்கையின் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தையும் ஒன்றிணைந்து கூட்டுறவின் குரலை வெளிப்படுத்துவதற்காக 1955-இலே இலங்கைக் கூட்டுறவு சம்மேளனத்தை ஸ்தாபித்து அதன் தலைவராக தெரிவு செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் அப் பொறுப்பினைச் ஏற்று விளிப்புடன் செயலாற்றினார.

" சமூக பொருளாதார விருத்தி " என்னும் அன்னாரது குறிக்கோளும் கூட்டுறவின் நோக்கமும் ஒன்றாக அமைந்திருந்தபடியினால் இவர் தனது வாழ்க்கையின் பெரும் பகுதியை கூட்டுறவுக்காக அர்ப்பணித்து தலைசிறந்த கூட்டுறவாளனாகத் திகழ்ந்தார். அறிஞரின்பொதுச் சேவைகளைக் கருத்திலும் கவனத்திலும் கொண்ட பிருத்தானிய பேரரசு இவருக்கு " M. B. E " ( Memper of The Order of The British Empire) என்னும் பட்டத்தை வழங்கி கௌரவித்தது.

அமரர் வீரசிங்கத்தினது அளப்பரிய பணிகளைக் கண்ட வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை இவரது ஞாபகார்த்தமாக யாழ். முற்றவெளிக்கு அருகே கூட்டுறவு மண்டபம ஒன்றைக் கட்டியெழுப்பி அதற்கு " வீரசிங்கம் மண்டபம் " எனப் பெயர் சூட்டினர்.

கூட்டுறவுப் பெரியாரின் உயர்ந்த உன்னதமான இலட்சியத்தை ஈடேற்ற நாமும் இக் கூட்டுறவு இயக்கத்துக்காக சேவையாற்றி அதன் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் முனைப்புடன் முன்நின்று செயல்படுவோமாக.

பரீட்சை......

பரீட்சைமுடிவுகள் வருமாறு முகாமைத்துவம்தொடர்பான உயர்தர தேசிய சான்றிதழ் பாடநெறிப் பரீட்சை :

(பெயர்கள் அடுத்த இதழில்)

மக்களை...

கணக்கான ரூபாய்களை கூட்டுறவு சங்கங்கள் இழந்த நிலையிலும், நிதிக்கஷ்டம், போக்குவரத்துக் கஷ்டம் என்பவற்றைத் தாங்கிக் கொண்டு ஒரு சில விற்பனைக்கிளைகளுடன் இல்லாமல் யாழ். மாவட்டம் பூராவும் சுமார் 550 கிளை விற்பனை நிலையங்கள் மூலம். நிவாரணம், உணவுமுத்திரை, மாணவமுத்திரை மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்கி வருகிறார்கள்.

இந்நிலையில் இதுவரை காலமும் இவ்விநியோகங்களுக்கு வழங்கப்பட்டு வந்த இலாப வீதத்தை சரி அரைவாசியாக யாழ். செயலகம் குறைத்து சங்கங்களை மேலும் நிதி நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.

சங்கங்களின் நிதி பற்றாக்குறையைக் காரணம் காட்டி உணவு விநியோகத்தில் சங்கங்களைப் புறக்கணிப்பது கூட்டுறவுக் கொள்கைகளுடன் சட்டரீதியாக இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களை பலவீனப்படுத்தும் யாழ். செயலகத்தின் முயற்சி கூட்டுறவாளர்களுக்கு கவலையளித்துள்ளது.

கூட்டுறவு......

நினைவு நாளைஒட்டி விடுத்த செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

கூட்டுறவு இயக்கத்தின் கோட்பாடுகளுக்கு, கொள்கைகளுக்கும் ஏற்ப (மலையாளம் புகையிலை உற்பத்தியாளர்சங்கம்) கூட்டுறவு மாகாண வங்கி, வடபகுதி ஐக்கிய மேற்பார்வை சபை வடபகுதி விவசாய உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், அகில இலங்கை கூட்டுறவுச் சம்மேளனம் போன்ற அமைப்புக்களை ஏற்படுத்தி கூட்டுறவின் வளர்ச்சிக்காக உழைத்தார்.

ஆசிரிய உலகில் சுடர் விட்டுப் பிரகாசித்தது போல தனது தலைமைத்துவ பண்புகளினால் அமரர் வீரசிங்கம் கூட்டுறவை வளர்த்தெடுத்தமையை கூட்டுறவாளர்களாகிய நாம் காலம் காலமாக இதயத்தில் வைத்து பூசித்து அவர் கண்ட கூட்டுறவு சமுதாயத்தை கட்டி எழுப்ப திடசங்கற்பம் பூணுவோம்.

**ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு**


அமரரின் கனவை நனவாக்குவோம்!

**தெல்லிப்பழை பல நோ. கூட்டுறவுச் சங்கம்**
தெல்லிப்பழை.

**பண்டத்தரிப்பு பரிஷ் பல. நோ. கூ. சங்கம்**
பண்டத்தரிப்பு.

**சங்கானை பனை. தெ. வள. அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**
சங்கானை.

**ஊர்காவற்றுறை பல நோ. கூட்டுறவு சங்கம**
ஊர்காவற்துறை.

**வேலணை பல நோ. கூட்டுறவுச் சங்கம்**
வேலணை.

**யாழ்ப்பாணம் பனை தெ. வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி**
யாழ்ப்பாணம்.

**வலிகாமம் பனை. தெ. வள கூ. சங்கங்களின் கொத்தணி**
மானிப்பாய்.

கூட்டுணர்வுடன் ஒன்று சேருவோம்!

**யாழ்ப்பாணம் பல நோ. கூட்டுறவுச் சங்கம்**
யாழ்ப்பாணம்.

**யாழ். மாவட்ட சி. க. கூட்டுறவுச சங்க சமாசம்**
யாழ்ப்பாணம்.

**சுன்னாகம் பல நோ. கூட்டுறவுச் சங்கம**
சுன்னாகம்.

**மானிபபாய் பல நோ. கூட்டுறவுச் சங்கம**
மானிப்பாய்

**யாழ். மாவட்ட விவ. உ. சந். நுக. கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**
111 பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

**அளவெட்டி - மல்லாகம் பல நோ கூ. சங்கம்**
அளவெட்டி.

**அரியாலை பனை. தெ வள. அபி. கூ. சங்கம்**
அரியாலை.


யா. மா. கூ. சபை அச்சகத்தில் அச்சிட்டு 14, மணிக்கூட்டுவீதி மா. கூ. சபையினரால் டிசம்பர் மாதம் வெளியிடப்பட்டது.